(அஓ) கதிராமங்கலம், போராட்டக்காரர்கள், விடுதலை மற்றும் வழக்குகளைத் திரும்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட கதிராமங்கலத்தில் விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்ற சூழ்நிலையில், அவர்கள்மீது போடப்படுள்ள வழக்குகளை வாபஸ் பெறக் கோரியும், காவல் துறையை திரும்பப் பெறக் கோரியும், அவர்களை விடுதலை செய்யக் கோரியும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். திரு. ராஜாராமன் மற்றும் திரு. இராமமூர்த்தி ஆகிய இருவரும் கடந்த 3 தினங்களாகத் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை விடுதலை செய்யக் கோரி எங்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். டெல்டா மாவட்டத்தைச் சார்ந்த 3 மாண்புமிகு அமைச்சர்களும் இந்த அவையில் இருக்கின்றனர். எனவே, இந்த அவையின் கவனத்தை ஈர்க்கும் வகையில், அவர்கள்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் பெறக் கோரியும், காவல் துறையை திரும்பப் பெறக் கோரியும், விடுதலை செய்யக் கோரியும், விவசாய நிலங்களைப் பாதுகாக்கக் கோரியும், பேராசிரியர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*

முற்பகல் 10—30

(அஔ) விழுப்புரம், உளுந்தூர்பேட்டை பகுதிகளில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு விதி 110—ன்கீழ் உளுந்தூர்பேட்டை மற்றும் விழுப்புரம் ஆகிய பகுதிகளில் 5 பேரூராட்சி, ஒரு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு,*

2017 ஜூலை 19] [திரு. இரா. குமரகுரு]

பகுதி II திட்டத்தின்கீழ் கொள்ளிடம் ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அறிவித்தார்கள். அதற்கு 2014 ஆம் ஆண்டில் அரசாணை கையொப்பமாகியிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக நடப்பு நிதியாண்டிலேயே 644 கோடி ரூபாய்க்கான அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

(ஆஅ) திருச்சிராப்பள்ளி, உய்யக்கொண்டான் ஆற்றிலுள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் பதிவு செய்கிறேன் என்று சொன்னார்கள். பதிவு செய்யட்டும். (குறுக்கீடு) பதில் சொன்னால் 2 மணி நேரம் ஆகும்.*

***திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது உய்யக்கொண்டான் ஆறு. அதனுடைய தலைப்பு பேட்டைவாய்த்தலையில் தொடங்கி திருவெறும்பூர் பகுதியிலுள்ள வாழவந்தான் கோட்டை ஏரியில் முடிவடைகிறது. மொத்தம் 40 அல்லது 44 மைல்கள் நீளம் கொண்ட அந்த வாய்க்கால்மூலம் கிட்டத்தட்ட 32,744 ஏக்கர் பாசனம் நடைபெறுகிறது. திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொது மருத்துவமனை, நீதிமன்றம் மற்றுமுள்ள முக்கியமான இடங்கள் அனைத்தும் இந்த வாய்க்காலின் அருகில் அமைந்திருக்கின்றன. கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆகாயத் தாமரைப் படர்ந்தும், கழிவுநீர் அதில் கலக்கின்ற காரணத்தினாலும் திருச்சியிலே சுகாதாரக் கேடு உருவாகியிருக்கிறது. அந்த ஆகாயத் தாமரைகளை அகற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஆஆ) தென் மாவட்ட விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி உள்ளிட்ட 4 தென் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு நெல் தவிர பிற பயிர்களுக்கான பயிர்க்*